National University of Singapore
**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 15 July 2015

# மாண்ட திமிங்கிலம் பெண் இனத்தைச் சேர்ந்தது

ஜூரோங் தீவின் கடலோரப் பகுதியில் இம்மாதம் 10ஆம் தேதி மாண்டு கிடந்த திமிங்கிலம் முதிர்ச்சியடைந்த, பெண் இனத்தைச் சேர்ந்தது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

திமிங்கிலத்தின் உடலில் ஆழமான வெட்டு ஒன்று இருந்ததாகவும் அது கப்பலை முன்னோக்கிச் செலுத்தப் பயன்படுத்தப்படும் இயந்திரத்தால் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இக்காயம் திமிங்கிலம் மாண்ட பிறகு ஏற்பட்டதா அல்லது அதன் மரணத்துக்கு அந்தக் காயம்தான் காரணமா என்பது இன்னும் தெரியவில்லை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.